# நவநாள் செபம்

## *தொடக்கச் செபம்*

எங்கள் அற்புத குழந்தை இயேசுவே! அடியோரை ஆசீர்வதித்து வரவேற்க கரம் விரித்து இங்கே காத்திருகின்றீர். செபத்தின் வழியாக உம்மை வாழ்த்தி வணங்க எங்களுக்கு உதவிபுரியும். நீரே எங்கள் ஆண்டவர்: நீரே எங்கள் மீட்பர்: எங்களைப்பற்றி உமக்கு_எவ்வளவோ அக்கறை. அந்த அக்கறையினால் தான் எங்கள் மன்றாட்டுகளை கேட்க எங்களோடு இருக்கின்றீர். எனவே எங்கள் குரலுக்குச் செவிசாய்த்து எங்கள் கோரிக்கைகளை கருணைகூர்ந்து அளித்தருளும். வல்லமை மிக்க உமது உதவியைத் தாழ்ந்த உள்ளத்தோடு இறைஞ்சி கேட்கிறோம். தந்தையோடும், தூய ஆவியோடும் இறைவனாய் என்றைன்றும் வாழ்ந்து ஆட்சிபுரியும் இயேசுவே. ஆமென்.

## *நவநாள் செபம்*

அற்புத குழந்தை இயேசுவே! அமைதியற்ற எங்கள் உள்ளங்களின்மேல் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளுமாறு தாழ்ந்து பணிந்து,வணங்கி வேண்டுகிறோம். இரக்கமே உருவான உம் இனிய இதயம் கனிவோடு எங்கள் செபத்தை ஏற்று உருக்கமாக நாங்கள் வேண்டும் இந்த வரத்தை.

*(வேண்டிய வரத்தை இங்கு குறிப்பிடுக)*

அளித்தருளுமாறு உம்மை இறைஞ்சுகிறோம். எங்களை வாட்டி வதைக்கும் துன்ப துயரங்களையும், வேதனை, சோதனைகளையும் நீக்கி, உமது குழந்தை திருப்பருவத்தின் பெயரால் எங்கள் மன்றாட்டை ஏற்றருளும். அதனால் உமது ஆறுதலையும் ஆதரவையும் பெற்று

தந்தையோடும், தூய ஆவியோடும் உம்மை என்றென்றும் நாங்கள் வாழ்த்திப் போற்றுவோமாக. ஆமென்.

### *திருப்பலியின் கருத்து*

அற்புத குழந்தை இயேசுவே! வானக நம் அன்புத் தந்தையை "அப்பா" என்று வாஞ்சையோடு அழைக்க எங்களுக்கு கற்றுத் கொடுத்தீரே; நாங்களும் உம்மோடு ஒன்று சேர்ந்து அவ்வன்புதந்தைக்கு இத்திருப்பலியை ஒப்பு கொடுக்கின்றோம். அன்பு பலியாக அவருக்கு உம்மை ஒப்பு கொடுக்கின்றோம். உம்மோடு எங்களையும் கூட்டிச் சேர்ந்து அவருக்கு காணிக்கையாக்குகிறோம். எங்களுக்காக மட்டுமல்ல; பரந்த இவ்வுலகில் எல்லா மக்களுக்காகவும் உம்மை மன்றாடுகின்றோம்.